**ந.க.எண். F1 / 12645 / 2025** **சேலம் மாநகராட்சி**

**<u>28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

**தீர்மானம் எண். 645/2025-26** **பொருள் எண். 1**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் 14.08.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்கண்ட அறிவிப்பில் "தூய்மை பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு சமைப்பதற்கும், அதை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண், 29143/2025 எச்.3 நாள்: 30/09/2025. இல் 24 மாநகராட்சிகள் மற்றும் 145 நகராட்சிகளில் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 73,098 பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு நாள்தோறும் ஒரு வேளை உணவு வழங்குவதற்குகான திட்டத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூ.384,22,45,452/- (ரூபாய் முந்நூற்று எண்பத்தி நான்கு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து நானூற்று ஐம்பத்திரண்டு மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பேரில் சேலம் மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களுக்குட்பட்ட 60 கோட்டங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுனர்கள், புற ஒப்படைப்பு தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள்,

டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகிய மொத்தம் 3420 பணியாளர்கள் நாள்தோறும் காலை சிற்றுண்டி மொத்தம் 67 இடங்களில் வழங்கும் பணிக்கு 21.11.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை கீழ்க்கண்டவாறு ஒற்றை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றன அவற்றின் விபரம் பின்வருமாறு

தொடர்ச்சி..

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | தொழில் நுட்ப தகுதி பெற்ற நிறுவனங்களின் விபரம் |
|---|---|---|---|
| 1 | M/s AMBOY Associates,<br>638, Gandhi Nagar, Vaikalpattarai,<br>Salem 636003. | EMD. Rs.16,91,000/-<br>UTR No. CHV3105659<br>Ref No. 7447111517780<br>SBI Bank / Date 21-11-2025 | தகுதி பெற்றுள்ளது |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் M/s AMBOY Associates, சேலம் நிறுவனத்தினர் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு 24.11.2025 தேதியில் விலை பட்டியல் திறக்கப்பட்டது. இவற்றில் M/s AMBOY Associates, சேலம். நிறுவனம் (உணவு பொட்டலம் ஒன்றுக்கு) ரூ.40.92 பைசா வீதம் வழங்கியதை விலை குறைப்பு செய்து (Negotiation) வழங்குமாறு இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக 24.11.2025 மற்றும் 26.11.2025 இல் கடிதம் அனுப்பப்பட்டது.

விலைக்குறைப்பிற்கு பின் தயார் செய்யப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விலை பட்டியல் | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1** | M/s AMBOY Associates,<br>638, Gandhi Nagar, Vaikalpattarai,<br>Salem 636 003. | **ரூ. 40.85 பைசா** | EMD. Rs.16,91,000/-<br>UTR No. CHV3105659<br>Ref No. 7447111517780<br>SBI Bank / Date 21-11-2025. |

மேற்படி பணிக்கு M/s AMBOY Associates,Salem. நிறுவனத்தினர் உணவு பொட்டலம் ஒன்றுக்கு ரூ. 40.85 பைசா வீதம் வழங்கியதை ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்.158 நாள்: 02-11-2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table-II இன் படி மேற்கண்ட பணிக்கு M/s AMBOY Associates,Salem. நிறுவனத்தினருக்கு மூன்றாண்டிற்கு பணிமேற்கொள்ள பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.

ந.க.எண். இ2 /1389–1 /2025 **சேலம் மாநகராட்சி**

**28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

**தீர்மானம் எண். 646/2025–26** **பொருள் எண். 2**

**2025–2026ஆம் ஆண்டு** (SASCI) நகர்ப்புற சீர்திருத்தங்களுக்கு சிறப்பு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலக பகுதிகளில் உள்ள மாநகராட்சியின் சொத்துக்களை Asset Mapping செய்ய வேண்டியுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.DMA/767/2025/R3, நாள்.24.11.2025–ல் கண்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் விலைவிகிதத்தின்படி மாநகராட்சி சொத்துக்கள் முறையே, 1) சூரமங்கலம் மண்டலம்–528 கட்டிடங்கள், 2) அஸ்தம்பட்டி மண்டலம்–421 கட்டிடங்கள், 3) அம்மாபேட்டை மண்டலம்–55 கட்டிடங்கள் மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலம் –343 கட்டிடங்களை உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை Asset Mapping செய்யும் பணியினை மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி **நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்–57(7)ன் கீழ்,** விலைப்புள்ளி 25.11.2025 ஆம் தேதியன்று கோரப்பட்டது.

நான்கு வார்டு அலுவலகங்களிலும் முறையே பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்க்கண்டுள்ள விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சூரமங்கலம் மண்டலம் விலைப் புள்ளி தொகை.ரூ. | அஸ்தம்பட்டி மண்டலம் விலைப் புள்ளி தொகை.ரூ. | அம்மாபேட்டை மண்டலம் விலைப் புள்ளி தொகை.ரூ. | கொண்டலாம்பட்டி மண்டலம் விலைப் புள்ளி தொகை.ரூ. |
|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு தொகை ரூ. | 21,00,000 | 17,00,000 | 22,00,000 | 14,00,000 |
| 1. | **M/s. Gridline Surveys and Geospatial Pvt. Ltd.,** Chennai (L 1) | ரூ.20,87,420/– | ரூ.16,63,800/– | ரூ.21,15,740/– | ரூ.13,57,000/– |
| 2. | M/s. JP Surveys & Consultants, Chennai (L 2) | ரூ.23,98,940/– | ரூ.19,12,190/– | ரூ.24,31,390/– | ரூ.15,59,370/– |
| 3. | M/s. Padmini Engineering, Chennai ((L3) | ரூ.27,10,460/– | ரூ.21,60,580/– | ரூ.27,47,040/– | ரூ.17,61,740/– |

**மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள** M/s. Gridline Surveys and Geospatial, Chennai, **(L1) என்ற ஒப்பந்ததாரர்** நான்கு மண்டல அலுவலகங்களிலும் **மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள விலைப்புள்ளியை நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்–57(7)ன் கீழ், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு,** 25.11.2025 அன்று **பணி ஆணை** வழங்கப்பட்டது.

தொடர்ச்சி..

மேற்காணும் Asset Mapping செய்யும் பணியினை செய்து முடித்தால் (SASCI) நகர்ப்புற சீர்திருத்தங்களுக்கு சிறப்பு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து மாநகராட்சிக்கு ரூ.5.00/- கோடி மான்யமாக வழங்கப்படும். எனவே, இப்பணிக்காக ஏற்படும் செலவினத்தை ரூ.72,23,960/- பொது நிதியிலிருந்து செலவிடவும், பின்னிட்டு அரசு மான்யம் கிடைக்கப்பெற்றவுடன் அதிலிருந்து இச்செலவினத்தை ஈடு செய்து கொள்ளலாம்.

எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்து அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்:- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,<br>மேயர்<br>சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)<br>சேலம் மாநகராட்சி.

**ந.க.எண். இ10/9843/2025** **சேலம் மாநகராட்சி**

**<u>28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

**தீர்மானம் எண். 647/2025-26** **பொருள் எண். 3**

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித எண். எண்SLM/MT5FTNYD/39556/2024/2025/TCP நாள் 25.03.2025-ல், சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம். அழகாபுரம் புதூர் கிராமம், (Old S.No.155/14) New Ward-E, Block-22, T.S.No.3/20 என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 0.4883 ஏக்கர் (அ) 1976.40 ச.மீ பரப்பில் மனுதாரர் திருமதி. R.இளவேணி, சேலம், என்பவர் பெயரில் அமைத்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் 10 மனையிடங்களுக்கு தொழில்நுட்ப / திட்ட அனுமதி மனைபிரிவு அனுமதி எண். SWP/DTCP/Salem/Layout No.89/2025 & Planning Permission No.38/2025 என எண்ணிட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சாலை வடிவமைப்பின்படி மனைப்பிரிவு உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அமைத்து மாநகராட்சிக்கு சேலம் 1 எண் சார் பதிவாளர் சேலம் மேற்கு அலுவலக ஆவண எண். 1663/2025 நாள்-08.03.2025-ன்படி ஆணையாளர் சேலம் மாநகராட்சி அவர்கள் பெயரில் தானபத்திரம் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகர சார் ஆய்வாளர் அவர்கள் மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் உள்ளவாறு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மூலை முடக்குகள் நிலவியலில் அமைந்துள்ளன என்றும் அஸ்தம்பட்டி சார் பதிவாளர் 1எண் சார் பதிவாளர் சேலம் அலுவலகத்தில் தானமாக வழங்கப்பட்ட பொது ஒதுக்கீடு குறித்து பதிவு செய்துள்ள விபரங்கள் ஆகிய இரண்டும் ஒப்புநோக்கும் போது அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

கண்காணிப்பு பொறியாளர் மைய அலுவலகம் அவர்களின் அறிக்கையில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதியின்படி தார்சாலைகள், குடிநீர் வசதி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது எனவும், இருசாலைகள் சந்திப்பில் உள்ள மூலை முடுக்குகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளன எனவும், அளவீடுகள் சரியாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி..

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம். அழகாபுரம் புதூர் கிராமம், (Old S.No.155/14) New Ward-E, Block-22, T.S.No.3/20 என்ற எண்ணில் அமைந்துள்ள மொத்தம் 0.4883 ஏக்கர் (அ) 1976.40 ச.மீ பரப்பளவில் உத்தேசிக்கப்பட்ட 10 குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ததை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.

**ந.க.எண். E3/EST No.183/ B/2023-2024** **சேலம் மாநகராட்சி**

**<u>28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

**தீர்மானம் எண். 648/2025–26** **பொருள் எண். 4**

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 5–ல் அழகாபுரம் பெரியபுதூர் சுடுகாட்டில் உள்ள நவீன எரிவாயு (LPG) தகனமேடை கட்டும் பணிக்கு மூலதன மானிய நிதியின் கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.150.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் Roc. No.19089 / 2021 / E2 Dated : 24-12-2021 நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், 22.01.2024 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி பணிக்கு 24.01.2024 ஆம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி மூலம் கட்டிமுடிக்கப்பட்ட இத்தகனமேடை வளாகத்தை பொது நலம் கருதி ஏதாவது ஒரு தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்து நல்ல முறையில் பராமரிக்க, அரசாணை நிலை எண்:122, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ந.நி. 3, நாள்:27/06/2008–ன்படி அரசு மற்றும் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம்.

சேலம் மாநகராட்சி 5 வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி. T. தனலட்சுமி அவர்கள் மாண்புமிகு மேயர் அவர்களின் மூலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கோரிக்கை மனு சமர்ப்பித்துள்ளார். அவற்றில் மேற்படி அழகாபுரம் பெரியபுதூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையினை விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறும், M/s அமைதி அறக்கட்டளை நிறுவனத்தார், தங்களது சொந்த பொறுப்பிலும் செலவிலும் மேற்படி நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே M/s அமைதி அறக்கட்டளை நிறுவனத்தாருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தொடர்ச்சி..

<u>நிபந்தனைகள் பின்வருமாறு:</u>

1. முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பத்து வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. கால நீட்டிப்பு தேவைப்படின் மூன்று மாத காலத்திற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட அறக்கட்டளை விண்ணப்பிக்கப்படும் இந்த விண்ணபத்தினை பரிசீலித்து நவீன தகன மேடையினை பராமரிக்கும் உரிமத்தை சேலம் மாநகராட்சி மூலம் புதுப்பித்து / நிராகரித்து பிறப்பிக்கப்படும் ஆணையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

2. பத்து ஆண்டுகளுக்கு மேல் குத்தகையை புதுப்பிப்பதும், அனுமதி மறுப்பதும் மன்றம் மற்றும் அனுமதி அளிக்கும் அலுவலரின் முடிவைப் பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் குத்தகைக்குரிய சொத்தை எந்தவித இழப்பீடும் கோராமல் மாநகராட்சிகுத் திரும்ப ஒப்படைக்க வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட 10 ஆண்டு காலத்திற்குள் பொது நலன் கருதி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் நிலம் மாநகராட்சிக்குத் தேவைப்பட்டால், அப்போதுள்ள நிலையில் கட்டுமானத்துடன் அறக்கட்டளை, நிலத்தை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இதற்காக இழப்பீடு ஏதும் அறக்கட்டளை கோர கூடாது.

3. அனுமதி வழங்கும் சாதன அமைப்புகளுக்கும் கட்டுமானங்களுக்கு மேல், பின்னர் கூடுதல் கட்டுமானங்கள் எதுவும் தேவைப்படின், மாநகராட்சி முன் அனுமதியின்றி பணிகள் ஏதும் மேற்க்கொள்ளக்கூடாது.

4. எரிவாயு தகன மேடை வளாகம் மயானக் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் காரியங்களுக்கும் / நிகழ்ச்சிகளுக்கும் மற்றும் எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கப்படமாட்டாது.

5. ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை பயன்படுத்த கூடாது. மேலும் இந்த இடத்தை பயன்படுத்துவது சம்பந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்படவேண்டும்.

6. குறைந்த பட்சம் பராமரிப்புக் காலம் பத்து ஆண்டுகள் என்பதை மாநகராட்சி திருத்த விருப்பப்பட்டால் மேலும் நீடித்துக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ அறக்கட்டளை சம்மதம் தெரிவிக்க வேண்டும். அதே போன்று நிபந்தனைகளை மீறி அறக்கட்டளையின் செயல்பாடு இருந்தால் குத்தகையை ரத்து செய்யப்படும்.

7. அறக்கட்டளை பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் மாநகராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு வழங்கி நிறுத்திக் கொள்ளலாம். மேலும் நிலத்தில் உள்ள கட்டுமானங்கள், சாதன அமைப்புகள் முதலியவற்றை இழப்பீடு கோராமல் நல்ல முறையில் மாநகராட்சிக்கு திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி..

8. எரியூட்டப்படும் சடலத்திற்கான கட்டணம் ஒன்றுக்கு ரூ.1750 வீதமும், மாநகராட்சிக்கு பங்குத் தொகைரூ.150–ம் வாகனம் வைத்து இருப்பின் அதற்கு ரூ.700/–ம் வசூலிக்கலாம்.

9. மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது மாநகராட்சி சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு தங்கள் நிறுவனமே முழு பொறுப்பேற்க நேரிடும் சேலம் மாநகராட்சி எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

10. எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசு கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ளது.

11. நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மேயர், ஆணையாளர், சுகாதாரப் பிரிவு அதிகாரி மற்றும் அறக்கட்டளை நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம், இலாப நோக்கமின்றி பொது நல நோக்குடன் செலவுகளை சரிக்கட்டும் விதமாக இருக்க வேண்டும்.

12. ஜாதி, மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது மின் எரிவாயு மயானமாக பயன்படுத்தப்பட வேண்டும்.

13. எரிவாயு மயானத்தில், அறக்கட்டளை எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்பட கூடாது.

14. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு அறக்கட்டளையே முழு பொறுப்பு ஆகும்.

15. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து இந்த ஒப்பந்தப் பத்திரத்தை மாநகராட்சிக்கு எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

16. மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

தொடர்ச்சி..

மேற்காணும் நிபந்தனையின் பேரில் அழகாபுரம் பெரியபுதூர் எரிவாயு தகனமேடை பராமரிக்க M/s அமைதி அறக்கட்டளையில் இருந்து ஒப்பந்தப்பத்திரம் பெற்றுக்கொண்டு 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.

**ந.க.எண். E3/ Est No.48 / B / 2023-24** **சேலம் மாநகராட்சி**

**<u>28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

**தீர்மானம் எண். 649/2025–26** **பொருள் எண். 5**

சேலம் மாநகராட்சி 2023–24 ஆம் ஆண்டு 15 வது நிதி குழு மான்ய நிதியின் கீழ் புதியதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார துணை மையம் கட்டுவதற்கு ஒரு மையத்திற்கு ரூ.30.00 இலட்சம் வீதம் 12 துணை சுகாதார மையங்கள் கட்டுவதற்கு குழுமம் இயக்குநர் தேசிய சுகாதார திட்டம் சென்னை அவர்களின் செயல்முறை எண் 1869 / NUHM /SHS /2015 நாள்: 03–08–2023 இல் உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளில் சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்–1 இல் காமிநாயக்கன்பட்டி பகுதியில் துணை சுகாதார மையம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 30.00 இலட்சத்திற்கு 26–09–2023 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கு 0.21% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/S S V N போர்வெல் சர்வீஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 25,08,724.70 /– ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 419 நாள்: 30–10–2023 இல் அனுமதிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும்போது பணிதளத்தில் தள அளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும், இடத்தின் தன்மைகேற்ப சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்படாத இனமாகவும், சில இனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு பணிகள் மேற்கொண்டதிற்க்கான கூடுதல் அளவுகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண் | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Supplying and filling in foundation and basement with Well Gravel in layers of not more than 15cm thick | 25.00 | 7921.50 | 53.32 | 16902.44 | 8980.94 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | Ground Floor | 31.00 | 201233.71 | 44.27 | 287356.57 | 86122.86 |
| 3 | Brick work in cement mortar 1:5 mix using Fly Ash bricks of 230x110x70mm (8 3/4" x 41/4" x 23/4") from approved quarry including cost and conveyance of all | 3.00 | 19474.23 | 5.00 | 32455.00 | 12980.77 |
| 4 | Plain cement concrete 1:2:4 mix (One cement two CS sand and four aggregate) using | 4.50 | 28947.56 | 5.63 | 36212.16 | 7264.61 |
| 5 | Paving the floor with design Antiskirt ceramic tiles (colour and shade as directed) | 5.00 | 4891.50 | 12.57 | 12293.46 | 7401.96 |
| 6 | Dadooing walls with Ceramic tiles of size 200mm x 200mm x 6mm first quality design tiles of all colours laid in cement mortar 1:2 mix, | 26.00 | 35053.46 | 35.12 | 47341.76 | 12288.30 |
| 7 | Painting two coats with ready mixed plastic emulsion paint of 1st class quality and of approved color | 355.00 | 85313.60 | 522.51 | 125402.40 | 40088.80 |
| 8 | Supply and fixing of Stainless steel (Salem stainless steel) Door frame ( Box section | 6.00 | 7446.00 | 30.56 | 37924.96 | 30478.96 |
| 9 | Providing of 35mm thick factory made pre-laminated ABS (Acrolynitrile Butadiene Styrene) Door | 3.80 | 22594.80 | 11.18 | 66465.10 | 43870.30 |
| **10** | Supplying and fixing UPVC (Un-Plasticized Polyvinyl Chloride) Windows of casement type (open) from the | 9.50 | 71079.00 | 18.75 | 140268.75 | 69189.75 |
| **11** | Supplying and fixing in position White / Colour Glazed Model Floor Mounted European Water Closet of best quality and approved make | 2.00 | 10146.00 | 3.00 | 15216.00 | 5070.00 |
| **12** | Wiring with 2 x 1.5 sqmm (22/0.3) PVC insulated unshealhed SC.Cu. conductor of 1100V grade in | 15.00 | 40860.00 | 25.00 | 68100.00 | 27240.00 |
| **13** | Wiring with 2x4 sqmm(56/0.3) PVC insulated SC unsheathed Cu.Conductor cable of 1100V | 3.00 | 4545.00 | 6.00 | 9090.00 | 4545.00 |
| **14** | Supply and fixing of single box type 4'36W fluorescent fitting complete with electronic ballast with TW | 10.00 | 6750.00 | 14.00 | 9254.00 | 2504.00 |
| **15** | Supply and run of 2 of 6 sq.mm. (84 / 0.3) PVC insulated SC unsheathed copper conductor | 30.00 | 5310.00 | 98.00 | 17150.00 | 11840.00 |
| **16** | Supply and delivery and fixing of HDPE tank as per IS 12701 / 1996 including loading, unloading, transportation and letc., | 1.00 | 8111.00 | 2.00 | 16220.00 | 8109.00 |
| **17** | Supplyingand fixing of Bore well fittings as per standard specification as | | | | | |
| | 75mm PVC pipe | 10.00 | 1955.00 | 20.30 | 3958.50 | 2003.50 |
| | 75mm PVC Door Elbow | 5.00 | 486.50 | 7.00 | 679.00 | 192.50 |
| | 110mm PVC Elbow | 5.00 | 590.00 | 8.00 | 944.00 | 354.00 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 32mm PVC pipe | 10.00 | 647.50 | 20.90 | 1358.50 | 711.00 |
| | 25mm PVC Elbow | 5.00 | 49.75 | 18.00 | 180.00 | 130.25 |
| | II மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் : (SOR) | | | | | |
| **18** | Supply and Fixing of 48W Outdoor LED Street Light fitting (PWD SOR17-b) | | | 2.00 | 9963.04 | 9963.04 |
| **19** | Supplying and fixing i n position best approved of BIS quality PVC ra n water down fall pipes of 110 mm dia., hlength, etc., complete complying with standard specification. | | | 8.00 | 4718.00 | 4718.00 |
| **20** | Supply and fixing of horizontal type 4 way triple pole neutral MCB distribution board in sheet | | | 5.00 | 31498.70 | 31498.70 |
| **21** | Manufacturing, Supplying and Fixing of Stainless Steel Hand rails for staircase using 50mm dia 304L | | | 8.46 | 46736.17 | 46736.17 |
| **22** | Fabricating supplying and fixing of pre painted galvanium colour sheets with the | | | 27.64 | 28045.20 | 28045.20 |
| **23** | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for old iron works the rate is inclusive of all | | | 13.31 | 1804.30 | 1804.30 |
| | Total | | **563406.10** | | **1067538.01** | **504131.91** |

மேற்படி அட்டவணையில் கண்டுள்ள கூடுதல் அளவு பணிகள் ஒப்பந்த தொகைக்கு மிகாமல் அசல் மதிப்பீட்டு தொகை ரூ.30.00 இலட்சத்திற்குள் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான செலவின தொகை ரூ.**504131.91**/- என கணக்கிடப்பட்டுள்ளது. இச்செலவின தொகை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின் படி செயல்படுத்தப்படும் அளவுகளின் சேமிப்பு தொகையில் சரிசெய்ய வழிவகை உள்ளதாலும், அவசிய மாற்றங்களுடன் அசல் மதிப்பீட்டு தொகை ரூ.30.00 இலட்சத்திற்குள் பணி மேற்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டியும், இப்பணிக்கான செலவு தொகை ரூ. **504131.91/-**ஐ ஏற்கவும், M/S S V N போர்வெல் சர்வீஸ், நாமக்கல். என்பவருக்கு வழங்கிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.

ந.க.எண். சி17/10074/2025 **சேலம் மாநகராட்சி**

<u>28.11.2025 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

**தீர்மானம் எண். 650/2025–26** **பொருள் எண். 6**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 37(1) (i-a) ல் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளி நபர்களை மன்ற நியமன உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு திருத்தம் செய்யப்பட்டு, அரசாணை (Ms) எண்.119 மற்றும் 120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.26.06.2025 மற்றும் அரசாணை (Ms) எண்.289, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.08.09.2025ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைகளின்படி சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது தலைமையிலான மாவட்ட அளவிலான பரிசீலனை குழுவில் பரிசீலனை செய்து மாற்றுத்திறனாளி உறுப்பினர் நியமனத்திற்கான இறுதி பட்டியலை நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.13933/2022.எம்ஏ2, நாள். 24.11.2025ன்படி சேலம் மாநகராட்சியின் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக விதி எண்.153–A(5)ன்படி தேர்வு செய்யப்பட்ட திரு.மு.கௌதமன், த/பெ ரா. முருகன், 34/10, கந்தப்பன் தெரு, அம்மாபேட்டை, சேலம், அவர்கள் 27.11.2025 ஆம் நாளன்று காலை 10.25 மணிக்கு சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் முன்னிலையில் பதவியேற்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டார் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :– பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.

**சேலம் மாநகராட்சி**

**28.11.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

**தீர்மானம் எண். 651/2025-26**

**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானம்**

## இரங்கல் தீர்மானம்

கலைமாமணி கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் உடல்நலக்குறைவின் காரணமாக கடந்த 22.11.2025 ஆம் தேதியன்று இயற்கை எய்தினார்.

அவரது ஆன்மா சாந்தியடையவும், அவர்களது குடும்பத்திற்கு இம்மாமன்றத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கும் விதமாகவும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**தீர்மானம் :- தீர்மானம் நிறைவேறியது.**

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்,
மேயர்
சேலம் மாநகராட்சி.

// உண்மை சுருக்கம் //

உதவி ஆணையர் (பணியாளர்)
சேலம் மாநகராட்சி.